# செய்தி வெளியீடு

## 2017ம் ஆண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை


**காப்புறுதிக் கட்டுப்பண வருமானம் மற்றும் வளர்ச்சி வீதம்**

இலங்கை காப்புறுதி கைத்தொழிற்துறையினால் 2017ம் ஆண்டு காப்புறுதி கைத்தொழிற்துறை நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் எனும் இரு துறைகளிலும் 15.07% மொத்தக் காப்புறுதிக் தவணைக் கட்டண வளர்ச்சியை அடைய முடிந்தது. 2017ம் ஆண்டு இரு துறைகளும் மொத்த தவணைக் கட்டண வருமானமாக ரூபா 164,623 மில்லியனை பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2016ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 143,067 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 21,556 மில்லியன் அதிகமாகும்.

நீண்ட கால காப்புறுதித்துறை 2017ம் ஆண்டு மொத்த காப்புறுதித் தவணைக்கட்டண வருமானமாக ரூபா 71,504 மில்லியனைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2016ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 63,477 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 12.65% வீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது. பொதுக் காப்புறுதி வியாபாரம் 2017ம் ஆண்டு மொத்தக் காப்புறுதித் தவணைக் கட்டண வருமானமாக ரூபா 93,119 மில்லியனைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இது 2016ம் ஆண்டு பெற்றுக்கொண்ட ரூபா 79,590 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 17% வீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் கட்டாய மீள்காப்புறுதி விட்டுக்கொடுத்தலில் இருந்து 2017ம் ஆண்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் பெறப்பட்ட மீள்காப்புறுதிக் கட்டண வருமானம் ரூபா 3,683 மில்லியனாக இருந்ததுடன், இது 2016ம் ஆண்டு பெறப்பட்ட மீள்காப்புறுதி தவணைக்கட்டண வருமானமான ரூபா 2,397 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 53.65% வீதம் எனும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கொண்டுள்ளது. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் மீள்காப்புறுதி தவணைக் கட்டண வருமானமானது 2017ம் ஆண்டு கணிசமான அளவில் அதிகரிப்பதற்கு பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் பரந்த பல்வேறுபட்ட வகுப்புகளில் இருந்து மீள்காப்புறுதி வியாபாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

**வரைபு 1 : மொத்த காப்புறுதி கட்டுப்பண வருமானம்**




## காப்புறுதியின் ஊடுறுவல் மற்றும் பரம்பல்

காப்புறுதியின் ஊடுறுவல், 2017ம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் காப்புறுதித் தவணைக் கட்டணத்தின் வீதம் 1.24% ஆக பிரதிபலித்தது அத்துடன் 2016ம் ஆண்டு 1.20% வீதமாக இருந்த ஊடுறுவலுடன் ஒப்பிடுகையில் 2017ம் ஆண்டு சிறியளவான அதிகரிப்பைக் காட்டுகின்றதுடன், ஆசியப் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த வளர்ச்சி மிகக் குறைவாகவே உள்ளது. 2016ம் ஆண்டு நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் 0.54% வீதமாகவும் (2016: 0.53%) பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் ஊடுறுவல் 0.70% வீதமாகவும் (2015: 0.67%) இருந்ததுடன், இரு வியாபாரங்களும் 2016ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓர் சிறியளவு வளர்ச்சியைக் காட்டுகின்றது.


காப்புறுதி பரம்பல் மொத்தச் சனத்தொகையில் ஒரு நபருக்கான காப்புறுதித் தவணைக் கட்டண வருமானத்தைப் பிரதிபலிக்கின்றதுடன், இது 2016ம் பதிவுசெய்த ரூபா 6,747 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017ம் ஆண்டு பதிவுசெய்த ரூபா 7,677 மில்லியன் வளர்ச்சியைக் காட்டுகின்றதுடன், இந்த 13.78% வீத வளர்ச்சியானது சனத்தொகையில் ஏற்பட்ட குறைந்த வளர்ச்சியுடன் தவணைக் கட்டண வருமானம் அதிகரித்தமை காரணமாக ஏற்பட்டுள்ளது.

**மொத்தச் சொத்துக்கள்**

2016 இல் காப்புறுதிக் கம்பனிகளின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 525,190 மில்லியன் ஆவதுடன், இது 2017ம் ஆண்டு ரூபா 582,417 மில்லியனாக அதிகரித்துள்ளதுடன், இது 10.89% வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. நீண்ட கால காப்புறுதி வியாபாரச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 392,400 மில்லியன் (2016: ரூபா 345,589 மில்லியன்) ஆவதுடன், வருடாந்த அடிப்படையில் ஒப்பிடுகையில் 13.55% வளர்ச்சியைக் காட்டுகின்றது. பொதுக் காப்புறுதி வியாபாரச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 185,767 மில்லியன் (2016: ரூபா 173,985 மில்லியன்) ஆவதுடன், இது 6.77% வளர்ச்சியைக் காட்டுகின்றது.

31 டிசம்பர் 2017ம் திகதியில் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 4,250 மில்லியன் ஆவதுடன், 31 டிசம்பர் 2016ம் திகதி காணப்பட்ட ரூபா 5,616 மில்லியன் பெறுமதியான சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் மீள்காப்புறுதி வியாபாரமானது மறைமுக வளர்ச்சியை பெற்றுள்ளது.

**வரைபு 2 : மொத்த சொத்துக்கள்**





**காப்புறுதிக் கம்பனிகளினால் ஈடுசெய்யப்பட்ட கோரிக்கைகள்**

நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் என்பவற்றில் ஈடுபட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 73,877 மில்லியன் (2016 : 62,962 மில்லியன்) ஆவதுடன், இது 17.34% வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. முதிர்ச்சி மற்றும் மரணக் கொடுப்பனவுகளை உள்ளடக்கி நீண்ட கால

காப்புறுதிக் கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 25,967 மில்லியன் (2016 : ரூபா 22,485 மில்லியன்) ஆகும். மோட்டார், தீ, கடல் மற்றும் ஏனைய காப்புறுதிகளை உள்ளடக்கி பொதுக் காப்புறுதி வியாபாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி ரூபா 47,910 மில்லியன் (2016 : ரூபா 40,477 மில்லியன்) ஆகும். 2016ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி வியாரத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி முறையே 15.49% மற்றும் 18.36% வீதத்தினால் அதிகரித்துள்ளது.

**வரைபு 3 - காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகள்**





**காப்புறுதிக் கம்பனிகளின் இலாபம்**

காப்புறுதி வியாபாரத்தின் மொத்த இலாபம் (வரிக்கு முன்னர்) ரூபா 47,812 மில்லியனாக (2016 : ரூபா 26,852) அதிகரித்துள்ளதுடன், இதன் அபரித வளர்ச்சி 78.05% வீதமாகும். இவ்வருடம் பொதுக் காப்புறுதி வியாபாரம் இலாபமாக ரூபா 8,543 மில்லியனை (2016 : ரூபா 13,236 மில்லியன்) பெற்றுக்கொண்ட போது நீண்ட கால காப்புறுதி வியாபாரம் ரூபா 39,268 மில்லியனை (2016 : ரூபா 13,616 மில்லியன்) இலாபமாகப் பெற்றுக்கொண்டுள்ளது. 2016ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நீண்ட கால காப்புறுதி வியாபாரம் 188.41% எனும் வளர்ச்சியைக் கொண்டிருக்கையில் பொதுக் காப்புறுதி வியாபாரம் 35.46% வீத மறைமுக வளர்ச்சியைக் கொண்டுள்ளது.

நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் இலாபத்தன்மையில் கணிசமான அதிகரிப்புக்கான காரணம், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை நடாத்தும் காப்புறுதியாளர்கள் பங்குதாரர்களின் நிதிக்கு மிகைத்தொகையை பறிமாற்றம் செய்தமையாகும்.

**வரைபு 4 - காப்புறுதிக் கம்பனிகளின் இலாபம்**




**முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் விசாரணைகள்**

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோளான காப்புறுதி பூட்கையாளர்களைப் பாதுகாத்தல் என்பதற்கமைவாக, ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் காப்புறுதிக் கொள்கைகள் தொடர்பாக எழுந்துள்ள காப்புறுதி பூட்கையாளர்களின் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை சபை மேற்கொள்கின்றது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல ஆணைக்குழு காப்புறுதியாளர், தரகர் அல்லது முகவருக்கு எதிராக கிடைக்கப்பெற்ற ஏனைய முறைப்பாடுகளையும் விசாரணை செய்கின்றது. ஆணைக்குழுவிற்கு 2017ம் ஆண்டு சபைக்கு 348 புதிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றது. இக்காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 341 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டது/ முடிவுறுத்தப்பட்டது. இக்காலப்பகுதியில் சபையின் தலையீடு காரணமாக தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் மொத்தப் பெறுமதி அண்ணளவாக ரூபா 20 மில்லியன் ஆகும்.

**காப்புறுதியாளர்கள்**

31 டிசம்பர் 2017ம் திகதி செயற்பட்ட இருபத்தியாறு (26) காப்புறுதிக் கம்பனிகளில் (காப்புறுதியாளர்கள்), பன்னிரெண்டு (12) கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மட்டும் மேற்கொள்வதுடன், பன்னிரெண்டு (12) கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தை மட்டும் மேற்கொள்ளுகின்றன, அதேவேளை இதில் இரண்டு (02) கம்பனிகள் இணைந்த கம்பனிகளாகும் (இவை பொது மற்றும் பன்னிரெண்டு கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் எனும் இரண்டினையும் இணைத்து மேற்கொள்ளுகின்றன).

**காப்புறுதித் தரகர்கள்**

31 டிசம்பர் 2017 அன்று ஆண்டில், அறுபது (60) காப்புறுதித் தரகுக் கம்பனிகள் சந்தையில் செயற்பட்டதுடன், இவை பெரும்பாலும் பொது காப்புறுதி வியாபாரத்தில் தன் கவனத்தை செலுத்துகின்றன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்திற்கு காப்புறுதித் தரகர்களின் பங்களிப்பு போதுமானதாக இருக்கவில்லை. பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக காப்புறுதி தரகுக் கம்பனிகள் ரூபா 22,083 மில்லியன் (2016: ரூபா 17,518 மில்லியன்) காப்புறுதிக் கட்டுப்பண வருமானத்தை உழைத்துக்கொண்டதுடன் நீண்ட காலக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக இவை ரூபா 341 மில்லியன் (2016: ருபா 263 மில்லியன்) காப்புறுதிக் கட்டுப்பண வருமானத்தைப் பெற்றுக்கொண்டன. 2017ம் ஆண்டு காப்புறுதித் தரகுக் கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்ட கால வியாபாரம் என்பவற்றின் ஊடாக ரூபா 22,423 மில்லியன் வருமானத்தை பெற்றுக்கொண்டதுடன், இதே வியாபாரம் தொடர்பாக கடந்த வருடம் ரூபா 17,781 மில்லியனை உழைத்துக்கொண்டுள்ளது. எனினு் 2017ம் ஆண்டு காப்புறுதி தரகர் வியாபாரத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த கட்டுப்பண வருமானத் 26.1% வீதமாக அதிகரித்துள்ளதுடன், மொத்த தவணைக் கட்டுப்பண வருமானத்திற்கான தரகர் கம்பனிகளின் பங்களிப்பு 13.62% வீதமாகும்.

*குறிப்பு:*

*1) 2017 – தற்காலிக புள்ளிவிபரங்கள்*
*2) 2016 – மீட்டெடுக்கப்பட்ட கணக்காய்வு புள்ளிவிபரங்கள்*
*3) 2017ம் ஆண்டு உள்ளக பிரிவு கொடுக்கல்வாங்கல்கள் ( ஆயுள் மற்றும் பொது) நீங்கல்கள் தாக்கம் எதனையும் ஏற்படுத்தவில்லை*


**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**

**11வது மாடி, கிழக்கு கோபுரம்**

**உலக வர்த்தக மையம்**

**கொழும்பு 01**

| | |
|---|---|
| இணையத்தளம்: : www.ircsl.gov.lk | மின்னஞ்சல்: info@ircsl.gov.lk |
| தொலைபேசி: 011 2396184 - 9 | தொலைநகல்: 011 2396190 |


**04/10/2018**